

நீலகிரி மாவட்ட திட்டக்குழு உறுப்பினர்களாக வெற்றிபெற்றுள்ள தி.மு.க. வேட்பாளர்கள் மாவட்டக் கழக அலுவலக வளாகத்தில் உள்ள பேரறிஞர் அண்ணா, முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் ஆகியோரது சிலைகளுக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தி மாவட்டக் கழக செயலாளர் பா.மு.முபாரக்கிடம் வாழ்த்துப் பெற்றனர்.

### அதிகாலை 5 மணிக்கே நகராட்சி முழுவதும் பார்வையிட்டு

# நகரைத் தூய்மைப்படுத்தும் பணியை உறுதி செய்ய வேண்டும்!

### திருவண்ணாமலை மாவட்ட நகராட்சிகளின் அதிகாரிகள் ஆய்வுக் கூட்டத்தில் அமைச்சர் எ.வ.வேலு வலியுறுத்தல்!

திருவண்ணாமலை, ஜூன் 26-

"அதிகாலை 5 மணிக்கே நகராட்சி முழுவதையும் பார்வையிட்டு நகரை தூய்மைப் படுத்தும் பணியை உறுதி செய்ய வேண்டும்" என்று அமைச்சர் எ.வ.வேலு அதிகாரிகள் ஆய்வுக்கூட்டத்தில் வலியுறுத்தினார்.

திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் 4 நகராட்சிகளில் நடைபெற்று வரும் அரசு திட்டங்கள் தொடர்பான ஆய்வுக் கூட்டத்தில் பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலைத்துறை மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு பேசியதாவது:-

திருவண்ணாமலை மாவட்டத்தில் நான்கு நகராட்சிகளாகிய திருவண்ணாமலை, ஆரணி, செய்யார், வந்தவாசி ஆகிய நகராட்சிகளுக் குட்பட்ட தெருவிளக்குகள் எல்லாம் முறையாக பயன்பாட்டில் உள்ளதா என்றும், அப்படி இல்லையென்றால் அதற்கு என்ன காரணம் என்று ஒவ்வொரு ஆணையாளரும் உறுதி செய்ய வேண்டும், அதற்கு அடுத்தபடியாக புகார் வருவது குப்பை, ஏற்கனவே நேரடியாக அரசாங்கத்தின் சார்பாக நேரடியாக பணியாளர்கள் எல்லாம்



அமர்த்தப்பட்டு காலை நேரங்களிலே சம்மபந்தப்பட்ட ஆணையாளர்கள், சம்மந்தப்பட்ட சுகாதார துறை சார்ந்த அலு வலர்கள் என காலை 5 மணி முதல் நகராட்சி முழுவதும் மேற்பார்வையிட்டு, நகரை தூய்மை படுத்தும் பணியினை உறுதி செய்ய வேண்டும்.

குறைகளை நிவர்த்தி செய்வது யாருடைய கடமை என்று சொன்னால். அது ஆணையாளர்கள் மற்றும் பணியாளர்களுடைய கடமை தான். பெரும்பாலான இடங்களில் குப்பைகள் சரியாக எடுக்கப்படுவதில்லை என்று புகார் எனக்கு வாட்சப் மூலம் வருகின்றது. குடிநீர் சரியான முறையில் நகராட்சி முழுவதும் கொடுக்கப்படுகிறதா என்று ஆய்வு செய்ய வேண்டும், சாக்கடை தூய்மைப் படுத்திய பிறகு அங்கிருக்கும் குப்பைகளை உடனடியாக அப்புறப்படுத்தப்பட வேண்டும்.

மேலும் நான்கு நகராட்சிகளிலும் புறநகர் பகுதி அதிகரித்துக் கொண்டே இருக்கிறது. எனவே புறநகருக்கு சாலை அமைக்கும் கடமை அரசிற்கு உண்டு, ஆணையாளர்கள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் தொகுதி மேம்பாட்டு நிதியில் நமக்கு நாமே திட்டத்தின் மூலம் சாலை வசதிகளை புறநகரில் அமைப்பதற்கு அதற்கான நிதியை பெறுவதற்கு உறுப்பினர்களை அணுக வேண்டும்.

மேலும் கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டம் (பூங்கா), கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டம் (நூலகம் மற்றும் அறிவுசார் மையம்), கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டம் (சந்தை) கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டம் (எரிவாயு தகன மேடை) குடிநீர் விநியோகம், அம்ரூத் 2.0 (பூங்கா) அம்ரூத் (நீர்நிலை) பேருந்து நிலையம் 15வது மத்திய நிதி குழு (நகர்நல மையம்) 15வது மத்திய நிதி குழு, நமக்கு நாமே திட்டம், அரசு பள்ளி மாணவர்களுக்கு காலை உணவு வழங்கும் திட்டம், சாலை பணிகள் ஒருங்கிணைந்த நகர்புற வளர்ச்சி திட்டம் 2018-19, கசடு கழிவு மேலாண்மை திட்டம், நீர்நிலை மேம்பாடுகள், தேசிய நகர்புற வாழ்வாதார இயக்கம், தூய்மை பாரத இயக்கம், திடக்கழிவு மேலாண்மை பணிகளுக்கு ஒப்பந்த அடிப்படையில் பணியாளர் நியமனம், தெரு விளக்குகள் LED விளக்குகளாக மாற்றி அமைக்கும் பணி 2022-23, வீட்டு குடிநீர் குழாய் இணைப்பு வழங்கும் பணி, பாதாள சாக்கடை திட்டத்தின் கீழ் வீட்டு இணைப்பு வழங்கும் பணி, அரசிடம் நிலுவையில் உள்ள கருத்துருக்கள், நகராட்சியிலுள்ள முக்கிய பிரச்சினை மற்றும் மேற்கொள்ளப்பட வேண்டிய பணிகள் குறித்து துறை அலுவலர்களுடன் அனைத்து பணிகளையும் விரைந்து முடித்திட வேண்டும்.

இவ்வாறு அமைச்சர் எ.வ. வேலு அவர்கள் கூறினார்.

இந்நிகழ்ச்சியில் சட்டப் பேரவைத் துணைத்தலைவர் கு.பிச்சாண்டி, திருவண்ணாமலை மாவட்ட ஆட்சித்தலைவர் பா.முருகேஷ், சி.என். அண்ணாதுரை எம்.பி., சட்டமன்ற உறுப்பினர்கள் மு. பெ.கிரி (செங்கம்), அம்பேத்குமார் (வந்தவாசி), பெ.சு. தி.சரவணன் (கலசபாக்கம்), ஓ.ஜோதி (செய்யார்), மாநில தடகள சங்கத்துணைத்தலைவர் எ.வ.வே.கம்பன், இணை இயக்குநர் (மாநகராட்சிகள்) திருமதி.பாரிஜாதம், இயக்குநர், செய்யார் கூட்டுறவு சர்க்கரை ஆலை, எம்.எஸ்.தரணி வேந்தன், மாநில கைப்பந்து சங்க துணைத்தலைவர், இரா. ஸ்ரீதரன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர், வீ.வெற்றிவேல், மாவட்ட ஊராட்சிக்குழுத்தலைவர் திருமதி.பார்வதி சீனுவாசன், நகர மன்ற தலைவர்கள் திருமதி.நிர்மலா கார்த்திக்வேல் மாறன், ஏ.சி.மணி (ஆரணி), மோகனவேல் (திருவத்திபுரம்), ஜலால் (வந்தவாசி), உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



திருவள்ளூர் மேற்கு மாவட்டம் திருத்தணி சட்டமன்ற தொகுதி அலுவலகத்தில் பொதுமக்களிடமிருந்து குறை கேட்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு தொகுதி மக்களிடமிருந்து பல்வேறு மனுக்கள் பெறப்பட்டிருந்து. இந்த நிலையில் திருத்தணி தொகுதிக்குட்பட்ட திருவாலங்காடு ஒன்றியம் தாழவேடு கிராமத்தை சேர்ந்த கல்லூரி மாணவி செல்வி தார்மிகா தேசிய அளவில் நடைபெறும் பென்ஸ்காக் ஸ்லாட் விளையாட்டு போட்டியில் பங்கு பெற மணிப்பூர் செல்லும் உதவி வேண்டி மனுக்கள் வழங்கி இருந்தார் இதனை ஏற்றுக் கொண்ட திருவள்ளூர் மேற்கு மாவட்ட கழக செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ ரூபாய் 10.000 ஊக்க தொகை வழங்கி விளையாட்டு வீராங்கனை மாணவிக்கு வாழ்த்து கூறினார்.

# திருச்சி தெற்கு மாவட்டத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா!



### மாவட்ட கழக செயலாளர், அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி அறிவிப்பு !

**திருச்சி தெற்கு மாவட்டத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு பிறந்த நாள் விழா நிகழ்ச்சிகள் கீழ்க்கண்ட தேதிகளில் தெருமுனை பிரச்சாரம், ஏழை எளியோர்க்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா நடைபெறுகின்றது.**

**(ஜூன் - 2023 - ஜூன் 2024) ஜூன் மாத நிகழ்வுகள் 2023**

| வ.எண் | நிகழ்ச்சிகள் | நிகழ்ச்சி ஏற்பாடு | தலைமை | சிறப்பு அழைப்பாளர் |
|---|---|---|---|---|
| 30-06-2023 மாலை 6 மணி | தெருமுனை பிரச்சாரம் | வார்டு எண் 35,35A அரியமங்கலம் பகுதி | பா.ரெங்கநாதன் அ.கதிர்வேல் | கடையநல்லூர் இஸ்மாயில் தலைமை கழக பேச்சாளர் |
| 30-6-23 காலை 10.30 மணி | மாவட்ட மாநகர நெசவாளர் அணி சார்பாக நலிந்த சலவை தொழிலாளர்களுக்கு கதர், கைத்தறி துணி மற்றும் நலத்திட்டங்கள் வழங்குதல் | மாவட்ட, மாநகர நெசவாளர் அணி | ஆர்.பி .சுந்தர்ராஜன் மாவட்ட அமைப்பாளர் A.பெஞ்சமின் மாநகர அமைப்பாளர் | எஸ்.எல்.டி.ப.சச்சி தானந்தம் மாநில செயலாளர் |
| 28-06-23 மாலை 6 மணி | தலைவர் கலைஞர் அவர்களுக்கு புகழ் சேர்க்கும் தெருமுனை பிரச்சாரம் | வார்டு எண் 40,40A திருவெறும்பூர் பகுதி | அ.குணாநிதி ஆர்.அருண் குமார் | சேலம் கோவிந்தன் தலைமை கழக பேச்சாளர் |
| 29-06-23 காலை 9.00 மணி | மார்க்கெட் மண்டி தொழிலாளர்களுக்கு தலைவர் கலைஞர் முகம் பொறித்த ஆடைகள் மற்றும் வீட்டுக்கு தேவையான மளிகை பொருட்கள் வழங்கும் விழா ! | மாவட்ட, மாநகர தொழிலாளர் அணி | JJ.மகேஸ் மாவட்ட அமைப்பாளர் எ.பி.ரகுநாதன் மாநகர அமைப்பாளர் | பி.டி.சி.ஜி.செல்வராஜ் மாநிலச் செயலாளர் |
| 29-06-23 காலை 10.00 மணி | உலமாக்களை அழைத்து சிறப்பு செய்யும் நிகழ்ச்சி நலத்திட்ட உதவிகள் | மாநகர அவைத்தலைவர் | பி.ஏ.நூர்கான் | அன்பில் மகேஸ் பொய்யாமொழி மாவட்ட கழக செயலாளர்- திருச்சி டவுன் ஹாஜியார் |
| 29-6-23 மாலை 6.00 மணி | தலைவர் கலைஞர் அவர்களுக்கு புகழ் சேர்க்கும் தெருமுனை பிரச்சாரம் | (வட்ட எண் - 36) (வட்ட எண் 36A) செயலாளர்கள் | ஆர்.சுரேஷ், எம்.ஆனந்த் வட்ட கழக | ஆலந்தூர் மலர்மன்னன் தலைமை கழக பேச்சாளர் |
| 30-06-23 மாலை 6.00 மணி | தலைவர் கலைஞர் அவர்களுக்கு புகழ் சேர்க்கும் தெருமுனை பிரச்சாரம் | வார்டு எண் 18,18A மார்க்கெட் பகுதி | ஒய்.சிலம்பரசன் சி.பாண்டியன் | சேலம் சுஜாதா தலைமை கழக பேச்சாளர் |

**அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி**,
செயலாளர், திருச்சி தெற்கு மாவட்ட தி.மு.க.

### சமூக நீதிக்கான பணியை அச்சமின்றி முன்னெடுத்து அனைவரையும்

# 'இடஒதுக்கீடு எங்கள் உரிமை' என ஓங்கி முழங்கச் செய்தவர் வி.பி.சிங்!

### பிறந்த நாளையொட்டி - முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்துச் செய்தி!

சென்னை, ஜூன் 26-

சமூச நீதிக் காவலர், முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் உற்ற நண்பர், முன்னாள் பிரதமர் வி.பி.சிங் அவர்களின் பிறந்த நாளையொட்டி, கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியில், "சமூக நீதிக்கான பணியை அச்சமின்றி முன்னெடுத்து அனைவரையும் 'இட ஒதுக்கீட்டு உரிமை' என ஓங்கி முழங்கச்செய்தவர் வி.பி.சிங் அவர்கள்" எனப் புகழாரம் சூட்டியுள்ளார்.



இதுகுறித்து, முன்னாள் பிரதமர் வி.பி சிங் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளங்களில் வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தி வருமாறு:-

**முன்னாள் பிரதமர் வி.பி. சிங் அவர்களது பிறந்தநாளில், பிற்படுத்தப்பட்ட வகுப்பினரை முன்னேற்றுவதில் உறுதியான அர்ப்பணிப்புடன் இருந்த அப்புரட்சியாளருக்கு என் புகழஞ்சலியைச் செலுத்துகிறேன். சமூகநீதிக்கான பணியை அச்சமின்றி முன்னெடுத்து, அனைவரையும் "இட ஒதுக்கீடு எங்கள் உரிமை" என ஓங்கி முழங்கச் செய்தவர் அவர்.**

**வாய்ப்பு மறுக்கப்பட்டோருக்கு அதிகாரமளிக்கும் இலக்கில் வி.பி. சிங் அவர்களும் தலைவர் கலைஞர் அவர்களும் ஒன்றிணைந்து செயல்பட்டவர்கள் ஆவர். வி.பி. சிங் அவர்களது சிந்தனைகள் மேலும் ஒளிமயமான, சமத்துவமான எதிர்காலத்தை நோக்கி நம்மைத் தொடர்ந்து வழிநடத்தட்டும்.**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், தமது வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

### மணப்பாறை அருகே சாலை விபத்து:

# உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தலா ரூ.2 லட்சம் நிதி!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு

சென்னை, ஜூன் 26 -

மணப்பாறை அருகே சாலை விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு தலா ரூ. 2 லட்சம் நிதி வழங்க முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்.

இது குறித்து அரசின் செய்திக் குறிப்பில் கூறப்பட்டிருப்ப தாவது:-

**திருச்சிராப்பள்ளி மாவட்டம், மணப்பாறை வட்டம், வையம்பட்டி கிராமம் லெட்சம்பட்டி பிரிவு ரோடு அருகே, திருச்சிராப்பள்ளி திண்டுக்கல் தேசிய நெடுஞ்சாலையில் நேற்று (25-6-2023) மாலை திண்டுக்கல்லில் இருந்து திருச்சி நோக்கி சென்ற காரின் டயர் எதிர்பாராதவிதமாக வெடித்து திருச்சியில் இருந்து திண்டுக்கல் நோக்கி சென்ற அரசுப் பேருந்தின் மீது மோதியதால் ஏற்பட்ட விபத்தில் காரில் பயணம் செய்த மணப்பாறை வட்டம், கே.உடையாப்பட்டியைச் சேர்ந்த முத்தமிழ்செல்வன், (வயது 40), ஐயப்பன், (வயது 35) மணிகண்டன், மணப்பாறை வட்டம்,**

**ஆலிப்பட்டியைச் சேர்ந்த நாகரத்தினம், மற்றும் தோகைமலை வட்டம், பில்லூரைச் சேர்ந்த தீனதயாளன், (வயது 19) ஆகிய ஐந்து பேரும் உயிரிழந்தனர் என்ற செய்தியினைக் கேட்டு மிகுந்த வேதனையடைந்தேன்.**

**உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கும், அவர்களது உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்வதோடு உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தலா 2 இலட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.**

இவ்வாறு அரசின் செய்திக் குறிப்பில் குறிப்பிடப் பட்டுள்ளது.

### முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டினை முன்னிட்டு

# 103 இடங்களில் மெகா சிறப்பு மருத்துவ முகாம்! 1.88 லட்சம் பேர் பயன்!

### அமைச்சர் மா.சுப்பிரமணியன் தகவல்!

சென்னை, ஜூன் 26-

முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண் டினை முன்னிட்டு தமிழ்நாடு முழுவதும் 103 இடங்களில் கலைஞர் நூற்றாண்டு மெகா சிறப்பு மருத்துவ முகாம்கள் மூலம் 1.88 லட்சம் பேர் பயனடைந்தனர் என்று அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்துள் ளார்.

இது குறித்து அமைச்சர் மா.சுப்பிரமணியன் கூறியதாவது:-

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண் டினை முன்னிட்டு தமிழ்நாடு முழுவதும் 103 இடங்களில் கலைஞர் நூற்றாண்டு மெகா சிறப்பு மருத்துவ முகாம்கள் 24.6.2023 அன்று காலை 8 மணி முதல் மாலை 5 மணி வரை நடைபெற்றது. இதில் பதிவு செய்து பரிசோதித்து கொண்டவர்களின் எண்ணிக்கை 1,88,885 பேர் ஆகும்.

இம்மருத்துவ முகாமில் சித்தா மற்றும் இந்திய மருத்துவத்திற்காக பதிவு செய்து பரிசோதனை செய்து கொண்டவர்கள் எண்ணிக்கை 35,138 பேர் ஆகும். நேற்று நடைபெற்ற மருத்துவ முகாமில் பல்வேறு மருத்துவ துறைகள் அமைக்கப்பட்டு இருந்தது. இதில் பரிசோதித்து நோய் கண்டறியப்பட்டவர்கள் விவரம் வருமாறு:

நேற்று நடைபெற்ற மருத்துவ முகாமில் விநியோகிக்கப்பட்ட மருந்துகளின் செலவு தொகை ரூ.42,31,404. நீரிழிவு நோய் மற்றும் ரத்த அழுத்த நோய் எனும் இரண்டு நோய்களுக்காக பரிசோதிக்கப்பட்டவர்கள் எண்ணிக்கை 1,15,048. நீரிழிவு நோய் உள்ளவர்கள் என்று பதிவு செய்து பரிசோதித்து கொண்டவர்கள் 14,471.

நீரிழிவு நோய் உள்ளவர்கள் என்று பரிசோதித்ததில் கண்டறியப்பட்டவர்கள் 4,056 இரத்த அழுத்த நோய் உள்ளவர்கள் என்று பதிவு செய்து பரிசோதித்து கொண்டவர்கள் 19,217. இரத்த அழுத்த நோய் உள்ளவர்கள் என்று பரிசோதித்ததில் கண்டறியப்பட்டவர்கள் 5,576.

நீரிழிவு மற்றும் இரத்த அழுத்தநோய் உள்ளவர்கள் என்று பதிவு செய்து பரிசோதித்து கொண்டவர்கள் 8,333. நீரிழிவு மற்றும் இரத்த அழுத்த நோய் என்று இரண்டும் உள்ளவர்கள் என்று பரிசோதித்ததில் கண்டறியப்பட்டவர்கள் 2,005.

கருப்பைவாய் புற்றுநோய் கண்டறியும் பரிசோதனை மேற்கொண்டவர்கள் எண்ணிக்கை 7,849. கருப்பை வாய் புற்றுநோய் பரிசோதித்ததில் அறிகுறி உள்ளவர்கள் - 762. மார்பக புற்றுநோய் கண்டறியும் பரிசோதனை மேற்கொண்டவர்கள் 8,712. மார்பக புற்றுநோய் கண்டறியும் பரிசோதனையில் அறிகுறி உள்ளவர்கள் 1,176.

இரத்த சோகை கண்டறியும் பரிசோதனை மேற்கொண்டவர்கள் 44,165. பரிசோதனையில் இரத்த சோகை கண்டறியப்பட்டவர்கள் 5,492. சிறுநீரக செயல்பாட்டினை கண்டறியும் பரிசோதனை மேற்கொண்டவர்கள் 28,553.

பரிசோதனையில் சிறுநீரக பாதிப்பு உள்ளவர்கள் என்று கண்டறியப்பட்டவர்கள் - 785. இரத்தத்தில் உள்ள கொழுப்புச்சத்து கண்டறியும் பரிசோதனை மேற்கொண்டவர்கள் 28,658. இரத்த பரிசோதனையில் இரத்த கொழுப்பு அதிகம் கண்டறியப்பட்டவர்கள் 1,299.

காசநோய் பரிசோதனை மேற்கொண்டவர்கள் 12,817. சளி பரிசோதனைக்கான மாதிரிகள் எண்ணிக்கை 4,366. பரிசோதனையில் மேல்சிகிச்சைக்காக பரிந்துரைக்கப்பட்டவர்கள் 289. தொழுநோய் பரிசோதனை மேற்கொண்டவர்கள் 12,591.

தொழுநோய் பரிசோதனை மேற்கொண்டதில் மேல் சிகிச்சைக்காக பரிந்துரைக்கப் பட்டவர்கள் - 133. தொழுநோய் பரிசோதனையில் நோய் உறுதி செய்யப்பட்டு மேல் சிகிச்சைக்காக பரிந்துரைக்கப்பட்டவர்கள் - 14. கோவிட் 19 பரிசோதனை மேற்கொண்டவர்கள் - 936. பல் பரிசோதனை மேற்கொண்டவர்கள் 13,685. பல் பரிசோதனை முடிந்து மேல் சிகிச்சைக்காக பரிந்துரைக்கப்பட்டவர்கள் 1,565.

இ.சி.ஜி. பரிசோதனை மேற்கொண்டவர்கள் 14,894. இ.சி.ஜி. பரிசோதனையில் பாதிப்பு கண்டறியப்பட்டு பரிந்துரை செய்யப்பட்டவர்கள் 1,238. எகோ பரிசோதனை மேற்கொண்டவர்கள் 7,020. எகோ பரிசோதனையில் பாதிப்பு கண்டறியப்பட்டு பரிந்துரை செய்யப்பட்டவர்கள் - 715.


முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தில் பதிவு செய்தவர்கள் 13,125. தமிழ்நாடு பார்வை இழப்பு தடுப்புத் திட்டத்தின் மூலம் பரிசோதிக்கப்பட்டு கண் கண்ணாடி பெறப்பட்டவர்களின் எண்ணிக்கை 3,852.

இவ்வாறு அமைச்சர் மா. சுப்பிரமணியன் தெரிவித்தார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

## அ. இராசமாணிக்கம்

**ஜூன் 26 (2016)**



**பேறறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர் ஆகியோர்மீது பற்றுக் கொண்டு, மாணவப் பருவத்திலேயே தன்னை கழகத்தில் இணைத்துக் கொண்டு பணியாற்றியவர்.**

**கழகப் பொதுக்குழு உறுப்பினராக பொறுப்பு வகித்தவர்.**

**நாகை நிலவள வங்கி தலைவராகவும், நாகை கூட்டுறவு விற்பனை சங்கத்தின் தலைவராகவும், கீழையூர் கூட்டுறவு சங்கத் தலைவராகவும் பதவி வகித்தவர்.**

**1971–ல் நாகை சட்டமன்ற தொகுதியில் கழகத்தின் சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்று, அப்பகுதி மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர்.**

**கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**